# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

## CC NO. 266/2024

**Date** : 08.04.2026 **PW 6/ LW3**

| பெயர் | ரம்யா | ஆதார் எண் | |
|---|---|---|---|
| கணவர் பெயர் | வெங்கடேசன் | தொழில் | கூலிவேலை |
| கிராமம் | ஆரியநத்தம் | வயது | 26 |
| எதிரிகள் 2, 3, 4,6, 7,8, 9 ஆஜர். எதிரி 5 ஆஜர் இல்லை. குவிமுச 317 மனு அனுமதிக்கபட்டது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் ஆரியநத்தம் கிராமத்தில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1 தனலட்சுமி எனது ஊரை சேர்ந்தவர். எதிரிகளை தெரியும்.அவர்கள் எனது உறவுமுறை ஆவார்கள். கடந்த 26.04.2021 அன்று நண்பகல் 01.30 மணியளவில் நான் எனது அம்மா வீட்டில் இருந்து ஆரியநத்தம் VAO அலுவலகம் வழியாக எனது வீட்டிற்கு செல்லும்போது VAO அலுவலகத்தின் முன்பு எதிரிகள் அனைவரும் எங்கள் ஊரை சேர்ந்த அ.சா.1 தனலட்சுமி மற்றும் அவரது மாமனார் மணி ஆகிய இருவரையும் பார்த்து தேவிடியா ஒக்கால ஓழி உனக்கு என்னடா நிலம் என கூறி சண்டை செய்து கொண்டிருந்தனர். அப்போது அ.சா.1ன் கணவர் சுரேஷ் பஸ்ஸில் இருந்து இறங்கினார். அப்போது எதிரி ஆனந்தன் மற்றும் இளையபெருமாள் ஆகிய இருவரும் தனது கையில் மறைத்து வைத்திருந்த இரும்பு கம்பியால் சுரேஷின் தலை, முதுகு, தொடை மற்றும் மார்பு ஆகிய இடங்களில் அடித்து கீழே தள்ளி விட்டார்கள். மேலும் அங்கிருந்த பரமசிவம் என்பவரும் செங்கல்லால் சுரேஷை அடித்தார். அப்போது சண்டையை மறிக்க சென்ற அ.சா.1 தனலட்சுமி மற்றும் அவரது மாமனார் மணியை இளையபெருமாள், சங்கர், பரமசிவம், செல்வம் ஆகியோர் இரும்பு கம்பியால் அ.சா.1 தனலட்சுமியின் வலது பக்க தொடையில் அடித்தும், மணியை முன்பக்க தலையிலும் அடித்தார்கள். அப்போது அங்கிருந்து சண்டையயை மறிக்க சென்ற அ.சா.1 தனலட்சுமியின் நாத்தனார் அனிதாவை எதிரிகள் சகுந்தலா, பூபதி, ரீனா ஆகிய மூவரும் காலாலும், கையாலும் எட்டி உதைத்து மாறி மாறி அடித்தார்கள். அப்போது நானும் எங்கள் ஊரை சேர்ந்த ஆறுமுகம் என்பவரும் சண்டையை விலக்கிவிட்டு 108 ஆம்புலன்ஸ் - ஐ வரவைத்து அ.சா.1 தனலட்சுமி, அவரது மாமனார் மணியையும் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவம் தொடர்பாக தனலட்சுமி கொடுத்த புகாரின் அடிப்படையில் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எதிரி 1 சக்கரையும், மணியும் சகோதரர்கள் என்ற விஷயம் எனக்கு தெரியும். அவர்களுக்குள் நிலம் சம்பந்தமாக விரோதம் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மணி எனக்கு தாத்தா உறவு முறையாவார். மணியுடைய மகள் சங்கீதாவின் மகள் தான் நான். நான் VAO அலுவலகம் வழியாக வந்து கொண்டிருந்தபோது எதிரிகளுக்கும் மணி குடும்பத்தாருக்கும் சண்டை நடந்து கொண்டிருந்தது. நான் என்னுடைய 8 மாத குழந்தையுடன் தான் அப்போது சம்பவ இடத்திற்கு வந்தேன். சம்பவ இடத்தில் யாரெல்லாம் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றால் சக்கரை, ஆனந்தன், இளையபெருமாள், பரமசிவம், சங்கர், செல்வம், சகுந்தலா, பூபதி, மற்றும் ரீணா ஆகிய எதிரிகள் தனலட்சுமி மற்றும் அவரது மாமனாரான மணியிடம் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். நான் சண்டையில் பங்கேற்றேனா என்றால் இல்லை. சண்டையை விலக்கி தான் விட்டேன். எனது தாத்தா மணியை சண்டையிலிருந்து விலக்கி விட்டேன். சம்பவம் நடைபெற்ற வேளையில் VAO அலுவலகம் திறந்து இருந்ததா என்றால் திறந்திருந்தது. அங்கு VAO அலுவலகத்தில் ஆட்கள் நடமாட்டம் இருந்ததா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. சம்பவ இடமானது ஆள் நடமாட்டம் மிகுதியாக காணப்படும் இடம் என்று சொன்னாலோ அருகில் குடியிருப்புகள் உள்ள இடம் என்று சொன்னாலோ அது சரிதான். அங்கு வேடிக்கை பார்த்த ஆட்கள் யாரும் சண்டையை மறித்து விட்டார்களா என்றால் இல்லை. சுரேஷ் எனக்கு மாமா உறவு முறை ஆவார். ஆறுமுகம் எனக்கு சித்தப்பா உறவு முறையாவார். சம்பவத்தின் போது ஆறுமுகம் சம்பவ இடத்தில் தான் இருந்தார். அனிதா எனக்கு சித்தி உறவு முறை ஆவார். சம்பவம் மதியம் 01.00 - 01.30 மணி போல் நடைபெற்றது. இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டாரா என்றால் நான் சம்பவ இடத்திற்கு வந்தடையும்போது வாய் வார்த்தையாக பேசிக் கொண்டுதான் இருந்தார்கள். சுரேஷ் என்பவர் பஸ்ஸிலிருந்து சம்பவ இடத்திற்கு வந்த போதுதான் இரு தரப்பினரும் அடித்துக் கொண்டனர். எதிரிகள் தான் சுரேஷ் என்பவரை இரும்பு கம்பியால் தாக்கினர். எதிரி பரமசிவம் கல்லால் தாக்கினார். மணி தரப்பினர் எதிரிகளை திரும்பத் தாக்கினார்களா என்றால் இல்லை. தற்காப்பு தான் செய்தார்கள். சம்பவ இடத்திற்கு 108 ஆம்புலன்ஸ் எத்தனை மணிக்கு வந்தடைந்தது என்றால் மாலை சுமார் 4:30 மணி போல் வந்தது. தனலட்சுமி மற்றும் அவரது மாமனார் மணி 108 ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றனர். சம்பவத்தில் யாருக்கெல்லாம் அடிபட்டது என்றால் தனலட்சுமி, மணி, சுரேஷ் ஆகியோருக்கு அடிபட்டது. அனிதா என்பவருக்கு உள்காயங்கள் ஏற்பட்டது. காவல் நிலையத்தில் தனலட்சுமி புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர் எந்த தேதியில் புகார் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது ஆனால் சம்பவம் நடந்த மறுநாள் போலீசார் புகார் கொடுத்ததன் காரணமாக என்னை விசாரணை செய்தார்கள். போலீசார் விசாரணையில் நான் சண்டை பற்றி விளக்கமாக ஏதும் தெரிவிக்கவில்லை, 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததை பற்றி கூறினேன். அதன் பின்னர் போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. மணி, சுரேஷ், தனலட்சுமி மற்றும் அனிதா ஆகியோர் எதிரிகளை தாக்கியதாக

காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த புகாரின் அடிப்படையில் இந்த நீதிமன்றத்தில் CC 186/2024 என்ற எண்ணில் வழக்கு தற்போது நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மணி தரப்பினர் எதிரிகளை அடித்ததின் காரணமாக எதிரிகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மாமா எனது தாத்தா மணி தரப்பினர் எதிரிகளை அடித்ததன் காரணமாக அவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டு தற்போது நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது என்று சொன்னாலோ நான் எனது தாத்தா மணிக்கு ஆதரவாக தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் கூறுவதுபோல் எதிரிகள் இரும்பு கம்பி மற்றும் கல்லால் தாக்கவில்லை என்று சொன்னாலோ அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னாலோ அது சரியல்ல. சம்பவத்தில் எனது தாத்தா மணியுடன் சேர்ந்து நானும் எதிரிகளை தாக்கிவிட்டு தற்போது அவர்களுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. எனது தாத்தா மணியின் மீது உள்ள வழக்கை பற்றி எனக்கு தெரியும் என்று சொன்னாலோ நான் அதை தெரிந்து கொண்டே தெரியாது என்று பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவது போல் எதிரிகள் மணி தனலட்சுமி மற்றும் சுரேஷை தாக்கவில்லை என்று சொன்னாலோ நான் அவரது உறவினர் என்பதால் அவர்களுக்கு அனுசரணையாக தற்போது சாட்சி மளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.